**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 258 /2017**

**Deposition of P.W. 13**

Name : திரு. பரமசிவம்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 23.04.2025**

Accused Present.

முதல் விசாரணை-

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல்துறை உதவி ஆணையராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது தேனி மாவட்டம், கடமலைக்குன்று என்ற இடத்தில் வசித்து வருகிறேன். கடந்த 24.08.2012ம் தேதி தக்கலை காவல் வட்ட ஆய்வாளராக பணியாற்றிய போது தக்கலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய திரு.ஸ்டீபன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்றஎண்.972/2012 பிரிவுகள் 294(பி). 342, 307 மற்றும் 394 இ.த.ச படியான வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அஜித், மணிகண்டன் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.8, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9. பின்னர் வழக்கின் சாட்சிகளான விஜு, ஜஸ்டஸ், ராஜக்குமார், சதீஷ்குமார், ஸ்ரீஹரி, ராஜாசிங், பால்ராஜ், சுகந்த குமாரி, ஆகியவர்களை

தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 25.08.2012ம் தேதி காலை 09.00 மணிக்கு கஞ்சிமடம், ஐயப்பன் கோவில் அருகே வைத்து 1வது எதிரியை கைது செய்து விசாரிக்க அவர் எவ்வித துன்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மணிகண்டன், ஜஸ்டின் ராஜ் ஆகியவர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி வெட்ட பயன்படுத்திய கத்தியையும், செயினையும், இருசக்கர வாகனம் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10. அத்தாட்சி அ.சா.ஆ.11. படிவம் 95 அ.சா.ஆ.12. கத்தி சா.பொ.1. பின்னர் எதிரியையும், வழக்குச் சொத்தையும் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். அன்றைய தினம் 14.00 மணிக்கு வழக்கில் சம்மந்தப்பட்ட 3வது எதிரி முருகன் என்பவரை காட்டாத்துறை பஸ் பேருந்து நிறுத்ததில் வைத்து காரணம் கூறி கைது செய்து 14.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். பின்னர் நான் பணி மாறுதலில் சென்று விட்ட படியால் வழக்கு கோப்பினை எனக்கு பின் வந்த காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1வது எதிரியை கைது செய்த போது கத்தியும், செயினும் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். கத்தியையும், செயினையையும் கைப்பற்றிய பிறகு எதிரி கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வெட்டுக்கத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வெட்டுக்கத்தி 36 செ.மீ நீளமுள்ளது. அதில் 18 செ.மீ வெட்டுப்பகுதி, 7 செ.மீ இரும்பு பாகம், 11 செ.மீ துணியால் சுற்றப்பட்ட

கொம்பு கைபிடி என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட வாகனம் 1வது எதிரியினுடைய வாகனம் அல்ல என்றால் சரியல்ல. 1வது எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல்அறிக்கை படி 1வது எதிரி அ.சா.1–யிடம் இருந்து 2 பவுன் தங்கசெயினை பறித்தார் என்பது தான் வழக்கு எதிரியிடமிருந்து 10 கிராம் தங்க கோபிகண்ணி செயின் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். 2 பவுன் தங்க சங்கிலி கைப்பற்றப்படவில்லை. சம்பவ இடத்தில் ரத்தக்கறை இல்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றிய செயினை தங்கமா, இல்லையா என்பதை கண்டறிய ஆய்விற்கு அனுப்பவில்லை. கைப்பற்றப்பட்ட வெட்டுக்கத்தியில் ரத்தக்கறை இல்லை. அ.சா.1–யிடமிருந்து ரத்தம் பட்ட துணி கைப்பற்றப்படவில்லை. அ.சா.1 உடன் இருந்த அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான நபர்களின் துணியில் ரத்தம் காணப்படவில்லை. துணிகளை கைப்பற்றவில்லை. தக்கலை நீதிமன்றமும், காவல்நிலையமும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை போன்ற தகவல்களை நீதிமன்றத்திற்கு 5 நிமிடத்தில் கொண்டு வந்து விடலாம். 24.08.2012ம் தேதி இரவு 07.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை மற்றும் இதர ஆவணங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் 2வது எதிரியை நான் கைது செய்யவில்லை. 2வது எதிரியிடமிருந்து எவ்வித சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை.